காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic

தொகுதி - 6 | நாளிதழ் | 10 பக்கங்கள் சென்னை, 27 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 138

அமெரிக்கா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து மீட்கப்பட்ட 3 பழமையான வெண்கலச் சிலைகளை தமிழ்நாடு காவல்துறையிடம் ஒப்படைத்தது தொல்லியல் துறை



சென்னை – 27 நவம்பர், 2026 அமெரிக்கா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து மீட்கப்பட்ட 3 பழமையான வெண்கலச் சிலைகளை தமிழ்நாடு காவல்துறையிடம் ஒப்படைத்தது தொல்லியல் துறை.

இந்தியாவின் பழமையான கலை, கலாச்சாரச் சொத்துகளை மீட்கும் முயற்சியில் முக்கிய முன்னேற்றமாக, வெளிநாடுகளில் இருந்து மீட்கப்பட்ட 3 பழமையான வெண்கலச் சிலைகளை இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறை, தமிழ்நாடு காவல்துறையின் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைத்துள்ளது.

புதுதில்லியில் உள்ள தரோஹர் பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்தச் சிலைகள் ஒப்படைக்கப்பட்டன. இவற்றில் 2 சிலைகள் அமெரிக்காவின் ஸ்மித்சோனியன் அருங்காட்சியகத்தில் இருந்தும், ஒரு சிலை நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் இருந்தும் மீட்கப்பட்டவை.

மீட்கப்பட்ட சிலைகளின் விவரங்கள்:

1. சுந்தரர், பரவை நாச்சியார் சிலை: இது 16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகரப் பேரரசு காலத்து வெண்கலச் சிலையாகும். கள்ளக்குறிச்சி வட்டம் விராச்சோலபுரம் சிவன் கோவிலைச் சேர்ந்த இந்தச் அமெரிக்காவின் ஸ்மித்சோனியன் அருங்காட்சியகத்தில் இருந்து மீட்கப்பட்டது.

2. கண்ணப்ப நாயனார் சிலை: இது நாகப்பட்டினம் மாவட்டம் திருப்புகலூர் அருள்மிகு அக்னீஸ்வரசாமி கோவிலுக்குச் சொந்தமான சோழர் காலத்து வெண்கலச் சிலையாகும். மூன்று வளைவுகளுடன், நிற்கும் தோற்றத்தில், வலது கையைத் தனது கண்ணை நோக்கி உயர்த்திய நிலையில் கண்ணப்ப நாயனார் காட்சியளிக்கிறார். நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் இருந்து இது மீட்கப்பட்டது.